உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௩. } விரோதிகிருது ௵ வைகாசி மீ { பகுதி ௨.

## இல்லறவொழுக்கம்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி.)

"சம்பத்துக்களை விரும்புவோராகில் பிதா சகோதரன் புருஷன் மைத்துனன் இவர்கள் ஸ்திரீகளை கௌரவமாக நடத்தவேண்டும். ஆடையாபரணங்கள் கொடுத்துத் திருப்தி செய்யவேண்டும். ஸ்திரீகளை மகிமைப்படுத்தினால் தேவர்கள் சந்தோஷிப்பார்கள். ஸ்திரீகளைக் கௌரவமாக நடத்தாமலிருப்பார்களாகில் அவர்கள் செய்யும் எல்லாக்கிருத்தியங்களும் பலனின்றி வீணாய் விடும். ஸ்திரீகள் துக்கிக்க அக்குடும்பம் சீக்கிரம் நாசமடையும். அப்படியின்றேல் அக்குடும்பம் செழுமையாயிருக்கும். ஸ்திரீகள் கௌரவம் பெறாமல் சபிப்பார்களேயாகில் அக்குடும்பம் சூனியம் வைத்தாற்போல் முற்றும் நாசத்தையடையும்." என்று மநுஸ்மிருதி கூறுகின்றது.

இவைகளையெல்லாந் தலைவனே முதற்கட்சிந்திக்கற்பாலன். ஏனையரும் கவனிக்கற்பாலர். இம்முறையறியாது எலியும் பூனையும் போன்று பகைமை பாராட்டிப் பரிபவப்படுவர் சிலர். இது மிகவுங் கொடுமையேயாம். தலைவனுந் தலைவியும் மனம் வேறுபட்டவழி அவர்க்கு இன்பப்பேறு ஒரு சிறிதும் இன்றாம். அவர்க்

கின்றாகவே இரு முதுகுரவர்க்குமின்றாம், ஏனையர்க்குமின்றாம். தம்முள் மனம் வேறுபாடுறாமற்பாது காத்தல் தலைவன் றலைவியிருவர்க்குங் கடனாதல் போலவே மாதுலனாதியரும் அவ்வுரிமை பெற்றவராவர். ஒருமைப்பாடுள்ள வாழ்க்கையின் பெருமையும் அஃதில்லாத வாழ்க்கையின் சிறுமையும் நூல்களான்மட்டுமன்றிப் பல குடும்பங்களில் இன்றைக்குங் கண் கூடாக நாங்காணப் படுவனவேயாம்.

10. வாழ்க்கை முறை:—முப்பான் மொழியில் அறத்துப்பாலில் இல்லறவியல் கூறவந்த பொய்யில் புலவர் இல் வாழ்க்கையின் சிறப்புத்தோன்ற அதனை முதற்கட் கூறி, அதற்கு இன்றியமையாத் துணையாதலின் வாழ்க்கைத்துணை நலத்தைஅடுத்துக்கூறி, அவ்விருவரும் பெறும் பேறிது வென விளக்குவான் புதல்வர்ப்பேற்றை அதன் பிற் கூறினர். இவை உடற்றொடர் புடையனவாகி அவர்கள் மட்டிற் பெரிதும்நல்தரற்கு உரியனவாம். பின்னர் அவர்க்கும் பிறர்க்கும் பயன் படுவன வாகிய அன்புடைமை, விருந்தோம்பல், இனியவைகூறல், செய்ந்நன்றியறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில்விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங் கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை, புகழ் என முறையே தொடுத்து இருபதும் அதிகாரங்களால் எல்லா நலன்களையும் விரித்தோதியருளினர். மேலேகூறப்பட்ட குணஞ்செயல்களெல்லாம் இல்வாழ்வார்க்கு வேண்டப்படுவன வென்பது பெற்றாம்.

இத்தகைய வாழ்க்கை முறையில் மனையாண்மாட்டு இன்பநுகர்தல் புதல்வர்ப்பேறு கருதியே யன்றிக் கணத்திலழியுஞ் சின்னீரவாகிய சிற்றின்ப வேட்கை மீதூர்ந்து கோடலின்றாதலை விளக்கவே வாழ்க்கைத்துணை நலத்தையடுப்பப் புதல்வர்ப்பேறு வைக்கப்பெற்றதாகும். இதனை—

"நல்லற நூல்களிற் சொல்லறம் பல சில
இல்லறந் துறவற மெனச்சிறந் தனவே
அந்நிலை யிரண்டினுள் முன்னது கிளப்பிற்
கற்றநூற் றுறைபோய்க் கடிமனைக் கிழவன்
நற்குண நிறைந்த கற்புடை மனைவியோ

டன்பு மருளுந் தாங்கி யின்சொலின்
விருந்து புறந்தர் தருந்தவர்ப் பேணி
ஐவகை வேள்வியு மாற்றி யிவ்வகை
நல்லற நிரப்பிப் பல் புகழ் நிறீஇ இப்
பிறன் மனை நயவான் றன்மனை வாழ்க்கைக்கு
வரையா நாளின் மகப்பேறு குறித்துப்
பெருநலந் துய்க்கும் பெற்றித்தன்றே,,

என்னும், ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் திருவாக்கானே தெற்றென வுணரலாம். இத்தகைய மனைமாட்சியை யுணராது.

"கேட்டிட வேட்டவை யானையு முதவுங்
கற்பகத் தருவென அற்பமுங் கருதாது
அடியுடன் முறித்து முடிவுற எரித்துக்
கரிபெற முயன்ற கம்மியன் போல,,

மனையாண் மாட்டமைவுறு சிற்றின்பமொன்றே யெனக்கொண்டு உடற்றின வடக்கும் ஆவுறிஞ்சு தறியாகக்கித் தம் வாழ்நாளை வீணாக்குதல் பெரிதும் பேதைமைப்பாலதாம்.

11. விருந்தோம்பல்:—மேலே கூறியவாறு இல்வாழ்வார்க்கு வேண்டிய குணஞ்செயல்கள் பலவற்றுள்ளும் விருந்தோம்பல்மிகச் சிறந்த தொன்றாகும். விருந்தினர் பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும், அஃதின்மையிற்குறியாது வந்தாருமென இருவகைப் படுபவென்பர். விருந்து போற்றுதற்கு அன்பும் இன்சொல்லும் இன்றியமையாதன வென்பதை விளக்குதற்கே விருந்தோம்பற்கு முன்னும் பின்னும் அன்புடைமை இனியவை கூறலென்ற அதிகாரங்களைத் தேவர் வகுத்தருளுவாராயினர். விருந்தினரைச்சேணிடைக்காண்புழி முகமலர்ச்சியும் அதுகண்டு அணித்தாய வழி இன்சொற்கூறலும் அதுகேட்டுஅமர்ந்தவழி வேண்டுவன புரிதலும் விருந்து போற்றும் முறையாம். விருந்தினர்க்கு மலர் முகங்காட்டாது சிறிது புறக்கணிப்பின் அவ்வளவின் அவர் வாடிச்செல்வர்.

"மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து,, என்பவாக்கின் விருந்

தினரை மகிழ்க்கேற்பதே இல்லறத்தார்கடனும்.வேதமோதலாகிய பிரமயாகமும், ஓமம் வளர்த்தலாகிய தேவயாகமும், விருந்தோம்பலாகிய மானுடயாகமும், நீர்க்கடனாற்றலாகிய பிதிர்யாகமும், பலியீதலாகிய பூதயாகமுமென்னும ஐவகையாகத்துள்ளே விருந்தோம்பலும் ஒன்றாக நிற்பதுமட்டோ அவற்றுள் நடுநாயகமாக நிற்றலுமுடையது.

இன்னனமாக இல்வாழ்வார்புரியும் எல்லா அறங்களினும் தலைமை பெற்றுள்ள விருந்து புறந்தருதற்கு மனைவியின் நற்குணமே முக்கிய சாதனமாம். எததுணைப் பெருஞ்செல்வ முற்றிருப்பினும் மனைவி குணமிலியாயக்கால் விருந்தினரை மகிழ்வித்தல் ஒரு சிறிதும் இயலாது, அறக்கொடிய வறுமை யுற்றகாலத்திலே மிகப்பெரிய விருந்தினர் வரினும் மனைவி குணமுடையாளாயின், அது மிகச்சிறப்ப நடைபெறும். விருந்தினரைப்போற்றற்குக் குணம் மிகவேண்டுமேயன்றிப் பூணம் மிக வேண்டுமென்பதில்லை.

"குடநீரட் டுண்ணு மிடுக்கட் பொழுதுங்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையாறாக் கொள்ளு மடமொழி
மாதர் மனை மாட்சியாள்,,

என்பதானே தானுற்ற வறுமையால் விருந்தோம்பலிற் குறைபாடுறாமை பெறப்படும். அன்றியும் விருந்தாகவந்தார் தகுதி நோக்காது தமது பொருளளவிற்கேற்ப மலர்முகமும்இன் சொல்லுமுள் ளன்புங்கொண்டு இயைந்த மட்டில் உண்டிமுதலிய தந்து போற்றலே இல்வாழ்வார்கடனாகும். இதனை

"ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்,, என்ற

வாயுறை வாழ்த்துக்குப் பொருள் கூறும் ஆசிரியர் பரிமேலழகர்

"இல்லறம் பொருளளவிற் கேற்பவும் துறவறம் யாக்கை நிலைக்கேற்பவும் செய்தல்,, என்று பணித்தருளு மாற்றாலுணர்ந்து கோடலமையும். இங்ஙனம் விருந்து போற்றலின் அருமை பெருமைகளனைத்தையும் தேவர்கூறிய விருந்தோம்பலென்ற அதிகாரத்திற் பரக்கக்காணலாம்.

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று,,

"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு,,

என விருந்தயரும் முறையினையும் அதனாலடையும், பயனையும் நன்கு விளக்கியிருக்கின்றனர்.

விருந்து புறந்தருதற்கு இளையான்குடி மாறனாயனார் அற்புதச் சரிதமே அறிகுறியாகும். என்னை? ஒருநாள் முழுதும்தமக்கு உணவின்றி இலம்பாட்டாற் றளர்வுற்றிருந்த அந்நாயனாரும அவர் தேவியாரும் அள்ளிக்கொள்ளலாம நள்ளிருட்போழ்தின் கொண்மூப் பொழிந்து குளிருமேல் வையில் விருந்தாகப் போந்த ஒரு சிவனடியாரை உண்பிக்கக் கருதினர். தமக்குணவின்மையையும கடன்றருவாரின்மையையும் இருட்காலை யென்பதையும் வானம் பொழிதலையும நினைந்து மனம் புழுங்காது பசித்துவந்தவரை யுண்பிக்கவேண்டுமென வுண்மையாக நினைந்தனராதலின முற்பகற்போழ்து வயலிடை வித்திட்ட நென்முளையே அரிசியாயது. மனைக்கூரையே விறகாயது. முளைக்கீரையே கறியாயது. இக்கீரையுஞ் சோறும் அவ்வடியார்க்கு அமிழ்தினுமினிய உணவாயது. வறுமைக காலத்தும் மனந்தளராதுவிருந்து போற்றற்கு இதனிற் சிறந்த பிறிது சான்று முண்டுகொல்? "விருந்தில்லாச்சோறுமருந்து" என்னும் உலக வழக்கு மொழியும், "மருந்தேயாயினும் விருந்தோடுண்" என்ற நீதிவாக்கியமும் எக்காலத்தும விருந்தினரைப் போற்றவேண்டுமென்பதை வலியுறுத்துவனவாம். இல்வாழ்வார் விருந்தினரைப் புறக்கணிப்பாராயின் விருந்தினர் செய்த பாவமெல்லாம் இல்வாழ்வாருக்கும் இல்வாழ்வார் செய்த புண்ணியமெல்லாம் அவ்விருந்தினருக்கும் சேருமென்று மநுஸ்மிருதி முதலிய நூல்கள் முழங்குகின்றன. ஸ்ரீ ராமபிரானைப் பிரிந்த சீதாபிராட்டியார் தற்பிரிவால் தன்றலைவன்வருந்தி நிற்கும் நிலைகளைக்கூறித் தான்வருந்து தலைக்கூறுமிடத்து

"விருந்து கண்டபோதென்னுறுமோவென்று விம்மும்"

என்று கவிச்சக்கரவர்த்தியாகிய கம்ப நாடர் கூறுவாராயினர். கோவலன் மனைவியாகிய கண்ணகியென்பாள் பண்டுதான் இழந்தவற்றைக் கூறுங்கால்

"அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும்
துறவோர்க்கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர்கோடலும்இழந்தவென்னை"

எனக்கூறினள். இங்கே "தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடல்" எனவிசேடணங்கொடுத்து இளங்கோவடிகள் கூறியது விருந்து போற்றலின் உயர்வைக் கருதியேயாமென்பது கவனித்தற்பாற்றும், "இல்லாளையஞ்சிவிருந்தின் முகங்கொன்றநெஞ்சிற் புல்லாளனுத" எனச் சீவகன் கூறும் வஞ்சின மொழியிற்றிருத்தக்க தேவர் கூறுவராயினர். இவற்றால் விருந்து போற்றுதலால் வரும் விழுப்பத்தையும் போற்றாமையாற் போதரும் இழுக்கத்தையும் நம் முன்னோர்கண்மட்டுமன்றிப் புறமதத்தினரும் எடுத்துக்கூறி வந்திருக்கின்றனரென்பது பெறப்படும். இவையிற்றையுணராது தற்காலத்துச் செல்வரிற் பல்லோர் புதியராய்ப் போந்தார்க்கு நகைமுகங் காட்டி நன்மொழிகூறி நாடொப்பன செய்ய நாடாதவராகிக் கண்ணிருந்துங் குருடராகவும் செவியிருந்தும் செவிடராகவும் வாயிருந்தும் மூகராகவும் பொருளிருந்தும் வறியராகவும் செல்வச்செருக்காலிறுமாந்து தம் வாழ்நாளைப்பாழ்நாளாக்குகின்றனர்.

"செல்வம்வந் துற்றகாலைத் தெய்வமுஞ் சிறிதுபேணார்
சொல்வன வறிந்துசொல்லார் சுற்றமுந் துணையுநோக்கார்
வெல்வதே நினைவதல்லால் வெம்பகை வலிதென்றெண்ணார்
வல்வினை விளைவுமோரார் மண்ணின்மேல் வாழுமாந்தர்"

என்னுங்கவி இவர்கள் செயல்களையுள்ளவாறு புலப்படுத்துவதாகும்.

"ஈகைபரிதெனினு மின்சொலினுநல்கூர்தல் ஓகோகொடிது கொடிதம்மா" என்றவாறு குளிர்ந்த மொழிகூறவும் மிற்படுகின்றனர். இவ்வுலக மனைத்தும் நயமொழிக்கு வசப்படும். இன்சொற் கூறாது எத்தனை பொருளை வாரியிறைப்பினும் அப்பொருளைப் பெற்றவர் மனமகிழ்ச்சிகொள்ளார். கொடைசுருங்கினும் முகமலர்ந்து

லர்வேற்று நன்மொழி கூறப்பெற்றால் அவ்வளவில் மிகமகிழ்வதே யுலகியல். இவற்றாற் செலவதிகப்படுதலில்லை. உலகத்தாரது அன்பெல்லாம் வரவாக அமையும்.

"எதிர்சென்று முகமன் கூறியிருக்கையு நல்கியுண்டே
யதிசய மெனவினவி யவரவர்க் கியன்றவாறு
துதிபுரிந் துபசரிக்குந் தொழிலினாற் செலவொன்றில்லை
அதிர்கட லுலகுளோர்தம் அன்பெலாம் வரவாமன்றே"

என்பதை இல்வாழ்வார் நன்கு கவனித்தற்பாலர். இன்சொற் கூறல் முதலிய எல்லா அறங்களையும் வழுவாது நடத்திவரவேண்டும். அவை யொவ்வொன்றையும் விரிக்கிற் பெருகுமாதலின் விருந்தோம்பலாகிய இவ்வொன்றைப்பற்றி மட்டும் இவண் சிறிது கூறினேம். ஏனையவற்றையும் தெய்வநூலாகிய மெய்ந்நூல்களானும் ஆன்றோர் மொழியானும் அறிதலமையும்.

(12) இல்வாழ்க்கையின்பயன்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று."

"வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்."

என்பவாகலின் இல்வாழ்க்கையின் பயன் இம்மையிற் புகழ் பெறுதலேயாகும். இதனாற்றான் இல்லறவியலில் புகழ் இறுதிக்கட் கூறப்படுவதாயிற்று. புகழ்பெறுதற்கு ஈகையே கருவியாதலின் சிறந்தீந்து புகழ்பெற்று வாழ்வதே இம்மைப்பயனாம். இங்ஙனம் புகழ்பெற்று வாழ்ந்தவன் மறுமைக்கட் டேவனாகித் தேவபோக துய்த்தல் மறுமைப்பயனாம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பதால் இதனை நன்கு தெளியலாம்.

(13) இல்வாழ்க்கையே வீடுபேற்றையுந் தரவல்லதென்பது.

இல்வாழ்க்கையானது அறம்பொருளின்பங்களைப் பயத்தன்மாத்திரையில் நிற்பதொன்றோ? வீடுபேற்றினையும் தரவல்லதேயாகும்

பிருகத்தன்மைப்பட்டு எல்லா இன்பதுன்பங்களையும் தம்மனத்திற் கொண்டு விரிந்த சிந்தையின்றிக் குவிந்த மனத்துடன் இருந்த ஒருவனுமொருத்தியும் தம்முள் மன்றல்வினைமுற்றப் பெற்றபின்னர் அவ்விருவரில் ஒருவர் சுகதுக்கம் மற்றவர்க்கும் உரியனவென்று கொள்ளும்படியான மனநெகிழ்ச்சியாகிய அன்பு முளைதோன்றப் பெறுகின்றனர். அவரவர் உள்ளத்துள்ளே தம்மளவின் அடங்கிக்கிடந்த அன்பானது முளைத்துக் கிளைந்துத் தழைத்து வளர்வதாகின்றது. துணைவனுடைய இன்பதுன்பங்களனைத்தும் துணைவியினதாகவும் துணைவியின் இன்பதுன்பங்களனைத்துந் துணைவனதாகவும் கொண்டு ஒருவர்மீ தொருவர் அன்பு பாராட்டுவாராகின்றனர். இங்ஙனமாயவழி புதலவரைப் பெறுகின்றனர். பெற்றவுடன் இவர்களின் அன்பு மிகவும் விரிந்து பல்வேறு கிளையாகிப் பரவுகின்றது. அப்பிள்ளைகளின் சுகதுக்கமனைத்தும் இவர் தம்மவாகக் கோடல் மட்டுமன்று அப்பிள்ளைகள் பொருட்டுத் தமக்குரிய சகல பொருள்களையும் தமது உடலுயிர்களையுங்கூடச் செலவிடற்கு ஒருப்படுகின்றனர். மக்கட்பேறுடையார்க்கு அன்பு அதிகரித்தலாற்றான் புதல்வரைப் பெறுதல் என்ற அதிகாரத்தின் கீழ் அன்பு என்ற அதிகாரத்தைத் தேவர் வைத்தருளுவாராயினர். புதல்வர்க்கு ஒரு பிணிவந்தால் அப்புதல்வரைக் காக்கவேண்டித் தாமே மருந்துண்டு பத்தியங்காக்கின்றனர். புதல்வரது வாழ்நாள் விருத்தியைக்கருதி எத்தனையோ தானங்கொடுக்கின்றனர். தீர்த்தயாத்திரை போகின்றனர். கடவுள் வழிபாடு செய்கின்றனர். இன்னும் என்ன செய்ய வேண்டினும் பின்னிடுவாரில்லை. மக்கள் அல்லல் செய்து இடுக்கட்படுத்தினுஞ் சகித்துக்கொள்கின்றனர். இன்னும் மக்கண்மாட்டுளதாய அன்பின் பெருக்கத்தை யாரே அளவிட்டுரைப்பர்?

தசரதச் சக்கரவர்த்தியிடம் விசுவாமித்திர முனிவர் போந்து "நின்புதல்வர் நால்வருளுங் கரியசெம்மலொருவனைத் தந்திடுதி" எனக்கூறிய போழ்தத்து அச்சொற்கேட்ட சக்கரவர்த்தியின் உள்ளத் துடித்ததை என்னென்று கூறுவேம்?

“எண்ணிலா வருந்தவத்தோ னியம்பியசொன்
மருமத்தி லெறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனலுழைந்தா
லெனச்செவியிற் புகுதலோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
வாருயிரின் றாச லாடக்,
கண்ணிலான் பெற்றிழந்தா னெனவுழந்தான்
கடுந்துயரங் கால வேலான்”

இதுமட்டோ! கைகேயியானவள் இராமனைக் காட்டிற்கனுப்புமாறும் பரதனுக்கு முடிசூட்டுமாறும் கேட்டவெல்லை, அச்சக்கரவர்த்தி மனம்புலர்ந்து கூறிய சொற்களைக் கேட்டால் அக்கைகேயியை யொழிய உருகாதவர் யாருளர்?

“கண்ணே வேண்டு மென்னினு மீயக் கடவேனென்
உண்ணே ராவி வேண்டினு மின்றே யுனதன்றோ
பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல்
மண்ணே கொண்ணீ மற்றைய தொன்று மறவென்றான்”

இவ்வாறு புதல்வர் மாட்டும் அவரையுள்ளிட்ட சுற்றத்தார் மாட்டும நாளுக்குநாள் அன்புபெருகி வழியத் தொடங்குகின்றது. இவ்வாறு தானெனும் நினைப்பும் தனக்கெனும் இச்சையும் ஒழிவதாகிய தன் மறுப்பு பரோபகாரம் பொறுமை முதலிய வெல்லாம உள்ளத்திற் குடிகொள்ள கின்றன. இங்ஙனம தம்மோடு தொடர்புடையாரிடத்துத் தோன்றிய அன்பானது வரவர முதிர்ந்து எல்லார் பக்கலும செல்கின்றது. தொடர்புகருதாது யாவர்மாட்டும் செல்லும் நிலையில் இரக்கம அல்லது கருணையாகின்றது. இவ்வருள் முதிர்ந்து நித்தியாநித்திய விவேகத்தைத் தெளிவித்து

“என்னின் யாரு மெனக்கினி யாரில்லை
என்னினும் இனியா னொருவன் உளன்
என்னுளே யுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே”

என்ற தெய்வத்தமிழ்மறைத் திருவாக்கின்படி காணப்பட்டன வெல்லாம் அழியப்படுவனவாகிய உலகில் நமக்குப் பற்றுக்கோடாக வுள்ளவர் சிவபெருமா னொருவரே யென்று தெளிவதாகிய

மெய்யுணர்வு தலைக்கூடச்செய்து பக்தியாகின்றது. பின்னர் பத்திவலையிற் படுவோராகிய சிவபெருமான் திருவருட்பேறு சித்தித்தலால் வீடுபேறும் உறுவதாகின்றது. இக்கொள்கையை

"தனக்கென வாழுந் தனி மிருகத்தின்
மனக்கோ ணிமிர்த்து மற்றைய ரின்பமுந்
துன்பமுந் தனவா வன்புபா ராட்ட
மெள்ளமெள் ளத்தனை யுள்ளம் விரித்துப்
பொறையுஞ் சாந்தியும் படிப்படி புகட்டிச்
சிறிது சிறிதுதன் சித்தந் தெளித்துத்
தானெனு நினைப்புந் தனக்கெனு மிச்சையு
மோய்வுறச் செய்துமற் றொன்றாய் நின்ற
வெங்கு நிறைந்த பேரின்ப வெள்ள
மூழ்கி யதனில் மூழ்க யாரையும்
பக்குவஞ் செய்யுநற் பள்ளிச் சாலையிவ் வில்லறம்."

எனத் தமிழ் நூலுணர்ச்சியும் ஆங்கிலத் தேர்ச்சியும் பெற்றிருந்த நம்நாட்டுப் புலவரொருவர் இனியசொற்களால் முறைபடத் தொகுத்துக் கூறியிருக்கின்றனர். இதுமட்டோ இல்லறத்தின் பயன் ஐம்புல வின்பங்களாரத் துய்த்து அவற்றை வெறுத்து மெய்யுணர் வெய்தி வீடுபெறுதலே யென்பது ஆசிரியர் தொல்காப்பியனாருக்குங் கருத்தாகு மென்பதை—:

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே"

என அவரே வகுத்தருளினமையால் பசுமரத்தாணிபோல் நிலைநாட்டப் படுமென்க. அறுபத்து மூன்று நாயன்மாருள்ளே இல்லறத்திலிருந்து வீடுபேறடைந்தோர் பலராதலும் இக்கருத்தையே நிலைநாட்டுவதாகும்.

ஆகவே அறம்பொருளின்பம் வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கையும் தரற்பாலது இல்வாழ்க்கையே யாதலையுணர்ந்து நல்லனவற்றைப் புரிந்து அல்லனவற்றைக் களைந்து பரமகருணாநிதியாகிய சிவபெருமான் திருவருட் பேறுபெற்று என்றும் அழியாப் பேரின்ப வாழ்வை யடைவோமாக. சுபம்! சுபம்!! சுபம்!!!

மு. ரா. கந்தசாமிக்கவிராயர், பத்திராதிபர்.

குமரன்றனை.

# நயவஞ்சகம்.

வஞ்சகம் என்பது மனதில் ஒன்றை நினைத்துக்கொண்டு மற்றொன்றை வாய்மணக்கப் பேசுதலாகும். அதிலும் நயமாவது, சித்தசாந்தம், சுத்தமனமுள்ளவரிவரெனப் பலர்களுங் கொண்டாட, அவரவர்களது அபிப்பிராயங்கள் தமக்கும் உடன்பாடெனக் காட்டி, நயந்து நடிக்கும் ஒரு பெரிய சாதுரியமென்க. இவற்றால் பெரும்போக்கான வஞ்சகம் என்பதொன்றும், ஒன்றற்கும் இடங்கொடுக்காத நயவஞ்சகம் என்பதொன்றுமென்க. இந்நயவஞ்சகம் பலவழிகளிற் கைதேர்ந்த விவேகிகளுக்குள் சிலர்களிடத்து நின்று விளங்குவதாகும். அடைமொழியில்லாத வஞ்சகமென்பது சாதாரணமாகச் சமயத்துக்குத் தக்கபடி அவரவர் புத்திக்குப் பொருந்த தாம் சொல்லுகின்ற செய்திகளை நிரப்ப, முன்பின்னறியாது சிலர்கள் கூறுதலென்க.

கற்றறிந்தவர்கள் ஒரு செய்யுளுக்குப் பொருள் கூறினால் பதப்பொருளை முன்னர்க்கூறிப் பின்னர் ஒவ்வொரு முடிபுகட்கும் நயஞ்சொல்லுதல் எவ்வளவு சிறப்பைப் பெற்றிருக்கின்றனவோ, அவற்றைப்போல், வஞ்சகத்தில் நயவஞ்சகம் தற்காலம் சிலர்களிடஞ் சிறப்பைப் பூண்டு விளங்குகின்றது. நம்மவர்களிற் சிலர்கள் கூடியிருந்து யாதாயினும் ஒரு விஷயத்தைப் பேசிக்கொண்டிருக்கையில் ஒருவர் மற்றவர்களைப் பார்த்து நான் ஒருவனுக்காகக் கொஞ்சம் உள்வேலைசெய்கிறேன், அதைப் பாருங்கள் என்று சொல்வதையும் நாம் கேட்டுவருகின்றோம். உள்வேலையென்பதொன்றெனவே வெளிவேலை என்பது ஒன்றுண்டென ஏற்பட்டுவிட்டது. சிலர்கள் சாதாரணமாகவே ஒருவனைநோக்கி உனக்கு நான் சரியான வேலை செய்திடேனென்கிறார்கள். இதனால் இங்கு வேலையென்னும் வார்த்தை காரியம் முதலிய பொருள்களைத் தாராமல் ஒருவனைக் கெடுத்தற்கான வஞ்சகச்செயல் என்பதனைக் குறித்து நிற்கின்றது; இது புதியனபுகுதல் என்னும் இலக்கணத்தால் இக்காலத்தில் பிரயோகித்துக்கொண்ட வார்த்தைபோலும். வஞ்சகமென்பதே கூடாதகாரியம் என்பதாக நமது சாஸ்திரங்கள் மறுத்திருக்கவும், நாகரீகம் வளரவளரச் சிலர்களிடம் வஞ்சகத்துக்கு ஒரு நயமும் அமைந்திருக்கிறதெனக. நீதிவாக்கியக்காரர் அதி நுணுக்கமாக (வஞ்சகம்பேசேல்) என்கின்றனர். ஒருவர் ஒன்றைச் சிந்தித்தபின்னர் தான், பேச வாயெடுத்தல் வழக்கம். நீ அதைப் பேசாதே என்றால் அவ் வஞ்சகச்சாயல் மனதில் தண்டுதலே பெருந் தீங்கெனப்படும். நினைத்தலும் பேசுதலும் கூடாதென்பார் நினைத்தலென்பதனை உள்ளுறைப் பொருளாகவைத்து அதன் முடிபைப்பேசேல் என்றனரென நாம் அறிதல் வேண்டும். இவற்றால் நினைத

தவிர் பயன்படுவது பேசுதலெனவும் அது கூடாதெனவும் அவ் விரு செயல்களுக்கும் தொடர்புண்டெனவும் பொருள்விரிய வைத்திருக்கின்றன ரென்க. யாதொரு களங்கமின்றி உலகத்து உண்மை தெரிந்தவர்கள் தம்மில் தாழ்ந்தவர்களுடன் வார்த்தையாடுஞ் சமயங்களில் முழு அன்புடன் பகுங்குதலைக் குழந்தை பேசுவதைப்போல எவ்வளவு கனிவும் பணிவுமாகப் பேசுகிறார்கள். பகுத்துணரத்தக்க, விவேகத்தைப்பெற்ற, நமக்கு உண்மையுணர்ச்சி நிலைபெறுமாயின் இவ்வித வஞ்சக அலங்காரங்களெல்லாம் குடியோடிப்போகுமென்க. மனதைச் சுத்தமாக்க முயல்வதைவிட்டுப் பிறர் மெச்சிக்கொள்ள உடலைச் சுத்திசெய்வார் பலரென்ற கருத்தமைந்த

*மனத்தது மாசாக மாண்டார் நீராடி*
*மறைந்தொழுகு மாந்தர் பலர்.*

என்று ஸ்ரீ தேவர் திருவாய்மலர்ந்தருளிய இச்செய்யுள் இக்காலத்துலவும் நயவஞ்சகப் புலிகளுக்கே சொல்லிவைத்தனர் போலுமென்க. இக்காலத்துள்ள சிலர் தக்க செல்வாக்குள்ள ஒருவரை எங்கேனுங் காணநேர்ந்தால் தாம அன்னாரை முன்பின் அறியாதிருக்கவும் கைவசஞ்செயதல்வேண்டுமெனக்கருதி அவருக்கெதிரே கூத்தாடி க்ஷேமம்விசாரித்துத் தங்களுடைய தயவு இன்றையதினம் நான் பெற்றேன், தங்களுடையபிரஸ்தாபம் பலர்சன் சொல்லக் கேட்டிருக்கிறேன். என்று சாலஞ்செய்து பின்னர் தங்கள் ஊர் எது, நாமதேயம் யாது, எனக்கேட்டு, ஆனந்தபரவசமுற்றவரைப்போல ஆ! ஆ! என முகத்தைச் சுளுக்குதலும், கையையேந்திக் கொண்டு நிற்றலும், எவ்வளவு கமுதத ரப்புச் சமாசாரமாக இருக்கின்றன, இந்த நாடககாரர் அவ்விடம்விட்டு நழுவியபின்னர், அச் செல்வவானென்பவர் தம்முடன் கூடநிற்கின்றவர்களிடம் என்ன அன்பு, என்ன பணிவு, வார்த்தை சாதுரியமென்ன, தமது உடம்பை வளைத்து வணக்கிக்கொட்டும் அங்கசேஷ்டைகள் என்ன, இம்மாதிரியான ஜென்மங்களையும் கடவுள் உண்டாக்கினரே என்று இன்னும் பலபடச் சொல்லி அடங்காது சிரிக்கின்றார்கள். அந்த நாடககாரர் நினைத்துப்போன கருத்தாவது, நமது சாமர்த்தியத்தைக் காட்டிவைத்தோமெனவு தாம் சிநேகஞ் செய்துகொண்டோமெனவும், எண்ணி எண்ணி மகிழ்கின்றனர்.

இருதிறத்தாரையும் ஒருவர் கலந்து நடந்தசெய்தியைக் கேட்டு ஆலோசிக்குங்காலையில், ஓர் எள்ளளவும் பயனில்லாமல் விரலுக்கிறைத்த நீராய் முடிகின்றது. அக்கினியிடத்திற் சூடு லயமாகிஇருப்பதைப்போல, அவரவர்களது மனத்திலும், கடவுள் சுத்தசொரூபியாய் நின்று ஒவ்வொன்றையும் விளக்குவிக்கின்றான் என்பதைத் தெரிந்து கொண்டிருந்தால் சிலர்கள் தம்மை அதிசாமர்த்தியராக நினைத்துப்பிறர்களிடத்து வஞ்சகத்தனமாகப் பேசுதலுக்குடன் படமாட்டார்கள். இந்த நயவஞ்சகத்தால் விளைகின்றதீமைகள்

பலவற்றில், சிறிதைமட்டும் ஆராயின் மனப்பரிசுத்த மில்லாதுபோதலும், பொய் புரட்டுகள் விருத்தி யடைந்துவருதலும் கண்டவர்கள் எல்லாம் இவர் மழுமழுங்கி ஆசாமி என்றலும், களியப்பேசி கழுத்தறுக்கிறவர் என்றலும், நல்லவர்கள் சமீபத்திற்சென்று பேசப் பயப்படுதலும், ஆகிய இவை போன்ற கீர்த்திப்ரவாகங்கள் உண்டாகின்றன. காக்கை, கழுகு, நாய், பன்றி இப்பேர்ப்பட்ட கொடிய பிறவிகளைவிட்டுத் தப்பி, அருமையான இம்மனித ஜென்மத்தை, நாம் பெற்றதற்குச் சம்பாதிப்பன இக்காரியங்களா? இந்த நயவஞ்சக மகாமூர்த்திகள், சமாதானமான மனத்துடன் இவ்வுலகில் நிலையுள்ளது எது, நிலையில்லாதது எது, கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட உயிர்ப் பிறப்புக்களின் நிலைமை யாது, ஒவ்வொன்றற்கும் உள்ள தாரதம்மியங்கள் யாவை எனப் பாகுபாடுசெய்து, யூகிப்பார்களானால் இவ்வித வஞ்சகச் செய்கைகள் மனதில் ஊன்றுமா? ஊன்றாதே. இரண்டாவது செல்வவந்தர்களிற் சிலர்கள், பெருமிதத்தால் ஒரு விஷயத்தையும் நோக்காது, தங்களை அலங்கரித்துக் கொள்வதிற்றானே, மனம்பதிந்து வாழ்நாளை வீணாக்கித், தமக்குச் சேர்க்கையாக (2) (3) வஞ்சகப்புலிகளை வைத்துக்கொண்டு மனம்போன போக்கேபோய் பலவித தீச்செயல்களுக்கும் உடன்பட்டுநிற்கின்றார்களே, இவற்றாற் பெறுகிற லாபம் யாதோ? கொடுமை, கொடுமை. சுலபமாகவுள்ள சிறு நீதிவாக்கியங்களுள் உத்தமனுயிரு. தக்கோனெனத்திரி. வீடுபெறநில். நன்மைகடைப்பிடி எனச் சில எத்துணை அழகுபெறப் பொருள் கொடுத்து நிற்கின்றன. இவைபோன்றனவன்றோ அரிய மனிதப்பிறவி பெற்றதற்குள்ள பிரயோசனம், இவையன்றி ஆகாசப்பந்தலாகப் பேசுதலும் நேரத்துக்கு நேரம் குயுக்தியாகத் தம்மிடமிருப்பவர்கள் அருவருக்கக் குளறுதலும், பேசுவதுமுழுதும் வஞ்சகமும் பொய்யும் நிரம்பப்பிதற்றலும் ஆகிய இவைகள் ஓர் எள்ளளவும் நன்மை தருமா? ஆகவே, நம்மவர்களிற் சிலர்கள் வைத்திருக்கும், நயவஞ்சகங் கூடாதெனவும், அதனால் விளைவது தீமையே எனவும், அதை ஒழித்துவிடின், மனம் பரிசுத்தமடைந்து நன்மையான காரியங்களில் நாடுமெனவும், இதுவரை சொல்லினதென்க. இவ் வஞ்சகச்செயல் அற ஒழிந்தால் நம்மவர்கள் யாவரும் பரிசுத்தமனமுள்ளவர்களெனப் பிறதேயத்தார்களும் புகழ்ந்து கொண்டாடுவார்கள். நமது வைதிக வேத நூற்களுங் குன்றின்மேலிட்ட விளக்கைப்போல நெடுந்தூரம் நின்று நிலவி வருமென்க. யான் நிரம்பிய அபிமானமும், அன்புங்கொண்டு, நம்மவர்களெல்லாரும் பரிசுத்தம் பெற்றிருக்கவேண்டுமெனச் சிந்தித்து இவ்வியாஸம் எழுதினேன். அதற்குத் திருவருளுந் துணைநின்று செவ்வியடனத் தோடிருக்கச் செய்யுமாக.

நா. இராமசாமி பிள்ளை
பஜார் ஸ்ட்ரீட், குன்னூர் (நீலகிரி டிஸ்டிரிக்ட்.)

# மேகஸந்தேசம்.

---

9. அங்கே இரவில் காமினிகளாகிய யுவதிகள் தங்கள் காதலரைத் தேடிச் செல்லும் அவசரத்தால் அவர்களுடைய அளகங்களினின்றும் விழ்ந்த 'மந்தார' புஷ்பங்களும், காதுகளினின்றும் நழுவி விழ்ந்த தங்கக் கமல ஆபரணங்களின் இதழ்களும், மார்பினின்றும் நூல் தரித்து விழ்ந்த முத்துமாலைகளும், அந்த யுவதிகள் (தங்கள் காதலரைத் தேடி) இரவில் சென்ற மார்க்கங்களை சூரியோதயகாலத்தில் தெரிவிக்கும்.

10. அவ்வளகாபுரியில், குபேரன்நேசரான பரமசிவன் ப்ரத்யக்ஷமாய் எழுந்தருளியிருப்பதை யறிந்த மன்மதன், வண்டு வரிசையே நாணாக வாய்ந்த தன் வில்லை (பரமசிவனிடத்துள்ள) பயத்தால் எடுப்பதேயில்லை. ஆனால் காம சாஸ்திரங்களில் தேர்ந்த யுவதிகளின் சிங்காரச் சேஷ்டைகளாலும், காமிகளாகிய ஆடவர் மேல் புருவங்களை நெறுக்கி வளைத்து வீணாகாமல் எய்கின்ற (யுவதிகளின்) கடாக்ஷங்களா(கிய பாணங்க)ளும் மன்மதன், (காதலரை வருத்தும்) தன் காரியத்தை ஸாதித்துக் கொள்ளுகிறான்.

11. விசித்ரமான ஆடைகள், கண்களுக்குச் சிமிட்டல் முதலான சேஷ்டைகளைக் கற்பிக்கக்கூடிய மதுபானம், இளந் தளிர்களுடன் கூடிய மலர்கள், உயர்ந்த ஆபரணங்கள், யுவதிகளின் பாதாரவிந்தங்களி லணியத்தக்க செவ்வரக்குச் சாயம்—இவைபோன்ற ஸ்திரிகளுக்குபயோகமான அலங்காரங்களெல்லாம ஒரே கல்பகவிருக்ஷம் உண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றது.

12. அவ்வளகாபுரியில், குபேரனுடைய அரண்மனைக்கு வடதிசையில், இந்திரவில்போல் அழகிய தோரணத்தால் தூரத்திலிருந்தே அறியக்கூடிய எனது அரண்மனை யிருக்கின்றது. அதனருகே எனது மனைவியால் தன் புதல்வன் போல அன்புபாராட்டி வள

---

(குறிப்பு) கடாக்ஷம—கடைக்கண்பார்வை. புருவம் வில்லுக்கும், பார்வை மன்மத பாணத்துக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றன,

ர்க்கப்பட்டு வருவதும், கைகளால் எட்டிப் பறிக்கும்படி பூங்கொத்துகள் நிறைந்து வணங்கி நிற்பதுமான ஓர் இளம் 'மந்தார' விருக்ஷம் தோன்றும்.

13 எனது அரண்மனைப்ரதேசத்தில், மரகதக் கற்களால் அமைக்கப்பட்ட அழகிய படிவரிசைகளுடன் கூடியதும், மலர்ந்த புஷ்பங்களுடனும், வைடூரியமயமான அழகிய தண்டுகளுடனும் கூடிய பொற்றாமரைகள் நிறைந்ததுமான ஓர் தாமரைத் தடாகமிருக்கின்றது. அருகிலுள்ள மானஸ ஸரஸைக்கூடப் பாராட்டாமல் அத்தடாகத்தில் அநேக ஹம்ஸங்கள், உன்னைக்கண்டும் மனங்கலங்காமல் அவ்வளவு சுகமாய் வஸித்துக்கொண்டிருக்கும்.

14. அத்தடாகத்தின் கரையோரமாய், அழகிய இந்திர நீலக்கற்களாலிழைக்கப்பட்ட சிகரம் வாய்ந்ததும், சுற்றிலும் முளைத்த பொன்வாழை மரங்களால் பார்க்க ரமணீயமுள்ளதுமான ஓர் (சிறு) 'சிங்காரமலை'யுளது. நண்பனே! சுற்றிலும் மின்கொடிகளுடன் ப்ரகாசிக்கும் உன்னைப்பார்க்கும் பொழுதெல்லாம், என் காதலிக்கு அருமையான அம்மலையையே, யடிக்கடி திகிலடையும் என் மனதில் நினைத்துக் கொள்ளுகின்றேன்.

15. 'குரவக' (ச்செடிகளால் அமைக்கப்பட்ட) வேலிகளால் சூழப்பட்டதும், 'மாதவி' என்ற (வஸந்திலதை) மலர்க்கொடிகளாலமைக்கப்பட்டதுமான (மாதவி) மண்டபத்தினருகே, சிவந்த மலர்களுடனும், மெதுவாய் அசைகின்ற இளந்தளிர்களுடனும் கூடிய அசோக விருக்ஷம் ஒன்றும், பார்க்க அழகிய 'வகுள' மரமொன்றும் இருக்கின்றன. அவைகளில் அசோகமரமானது உன் தோழி (என் காதலி)யான இடதுபாதஸ்பர்சமும், வகுள மரம் அவளுடைய வாயமுதையும், என்னைப்போலப், பெற்றுத் தங்களாசையைத் தீர்த்துக்கொள்ள விரும்புகின்றன.

16. அவ்விருதருக்களின் நடுவில், இளம் மூங்கில்போல் பசுமையாயழகிய மரகதங்களாலிழைக்கப்பட்ட ஸ்தம்பத்தின்மேல் ஸ்படிகமயமான பீடமும், அதன்மேல் (பக்ஷிகள் தங்கும் பொருட்டு) பொன்னாலமைக்கப்பட்ட கோலும் கட்டப்பட்டிருக்கின்றன

றன. மாலைவேளையில் உனது நண்பனான மயிலானது கலகலவென்று தொனிக்கும் வளையல்களால் காதுக்கினிமையூட்டின தாளங்களுடன் எனது காதலியால் நாட்டியம் கற்பிக்கப்பட்டு, அப்பொற் கோலின்மேல் நர்த்தனம் செய்துகொண்டிருக்கும்.

17. நண்பனே! யான் இதுவரை கூறிவந்த அடையாளங்களை மனதில் ஞாபகப்படுத்திக்கொண்டு, இன்னும் (அரண்மனை) வாசற்புறத்தில், வரையப்பட்டுள்ள 'சங்கநிதி,' 'பத்மநிதி'களின் சித்திரங்களாலும் எனது அரண்மனையைக் கண்டுகொள்வாய் அஃது என்பிரிவா(ற்றாமையா)ல் அழகு குறைந்திருக்கும் சூரியன் மறைந்தபிறகு தாமரைதன் அழகையிழந்துவிடு மல்லவா?

R. வேதநாராயண சர்மா, B. A., B. L.,

---

ஸ்ரீஞான சம்பந்தஸ்வாமிநே சதாமங்களம்.

## மேலைச்சிவப்பட்டிச் சந்மார்க்க சபைக்கு *வாழ்த்துப் பத்திரிகை.

சந்மார்க்கமென்பது லோக தருமநூல்களிற் கூறுமாறு தீயொழுக்கங்களாகிய அசந்மார்க்கங்களைத் தன்னின் வேறுபடுத்துத் தான் அவற்றிற்கு வேறாய் நல்லொழுக்கங்களை பொதுவகையாற் காட்டி அங்ஙனம் வழங்கப் பெறுவதொன்று. லோகதரும நூல்களாவன வேதம் ஸ்மிருதி புராணம் இதிஹாசம் முதலியனவாம் அசந்மார்க்கங்களாவன கொலை களவு கள் காமம் வாய்மையின்மை அடக்கமின்மை வன்சொல்லுடைமை நாதிக்கியம் கடவுட் போற்றாமை அஞ்ஞானம் முதலாகப் பலதிறத்தன.

---

* இது மேலைச்சிவபட்டிச சன்மார்க்க சபையின் இரண்டாம் ஆண்டு நிறைவேற்றக் கொண்டாட்ட காலத்து திருநெல்வேலி ஸ்ரீமத் அம்பலவாண நாவல சுவாமிகள் எழுதியனுப்பியது

சன்மார்க்கங்களாவன கொல்லாமை கள்ளாமை கள்ளுண்ணாமை பிறர்மனைநயவாமை வாய்மை அடக்கம் இன்சொல்லுடைமை ஆத்திக்கியம் கடவுட்போற்றல் ஆன்மஞானம் முதலாகப் பல திறத்தன.

அசன்மார்க்கங்களுக்குப் பலம் இம்மைக் கட் பழியும் பாவமும் அரசன் முதலியோராற் றண்டமும் மறுமைக்கண் நரகமும், அதன் மேற்றீய யோனிகளுட்புக்குப் பிறத்தலும், இறத்தலுமென இவையாம்.

சன்மார்க்கத்துக்குப் பலம் இம்மையிற் புகழும் புண்ணியமும் எல்லாராலும் சன்மானமும், மறுமைக்கண் சுவர்க்காதி புண்ணியலோகப் பிராப்தியும்; அதன்மேல் ஆன்மஞானம் பெற்றுப் புருஷ தத்வம்வரை சென்று ஆன்மபோகம் புசித்தலுமென இவையாம் இது லோகதரும சன்மார்க்கமென்று சொல்லப்பெறும்.

இனிச் சிவதரும நூல்கள் கூறுமாறு சரியையாகிய தாதமார்க்கம் கிரியையாகிய சற்புத்திர மார்க்கம யோகமாகிய சகமார்க்கம் என்னும் மூன்றையும் தன்னின் வேறுபடுத்துத் தானவற்றிற்கு வேறாய்க் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிஷ்டைகூடுதல் என்னும் அறிவின் நல்லொழுக்கங்கள் நான்கினையும் பொதுவகையாற காட்டி அங்ஙனம் ஒழுகப்பெறுவ தொன்று. சிவதரும நூல்களாவன சித்தாந்த தந்திரங்களாகிய சிவாகமங்கள். சரியை முதலிய மூன்றையும் வேறுபடுதத்த் தானவற்றிற்கு வேறுதலென்றது அம்மூன்றையும் சாதனங்களாககொண்டு அவற்றின் சாத்தியமாகிய பயன் றானாய் அவை கீழ்ன்ற நிலைக்கண் எஞ்சிநின்ற முடிபு தானாய்நிற்றல். அங்ஙனம் நின்றும அவற்றை அவை முன்னமைந்தவாறு காளாளாது அவற்றின் சாரமாக அவற்றைத் தன்கட்கொண்டது ஞானமாகிய சன்மார்க்கம். அப்படிக்கொண்ட முறையாவது சரியைக் கேற்பக் கேட்டலும், கிரியைக்கேற்பச் சிந்திததலும, யோகத்திற்கேற்பத் தெளிதலும், ஞானமாகிய தனக்கேற்ப நிஷ்டை கூடலும் என இந்நான்கு திறத்தின் வைத்துணரப்படும். ஆதலால் லோக தருமநூலில் அசன்மார்க்கத்தை வேறுபடுத்து அதனின்

வேறாய் நின்றது சந்மார்க்கமென்பதற்குப் பாதகமாய் அவை வந்தவிடத்து அவற்றை வேறுபடுத்துத் தான் வேறாய் நின்றது சந்மார்க்கமென்பது பொருள். சிவ தரும நூலிலோ, தாதமார்க்க முதலிய மூன்றையும் வேறுபடுத்துத் தானதற்கு வேறாய் நின்றது சந்மார்க்கமென்பதற்குச் சாதகமாய் நின்ற நிலையில் அவற்றைத் தான் என்று கொண்டு முடிவில் அவற்றது சாத்தியமாய்த் தான் சாரமாய் நின்றதென்பது பொருள். இங்ஙனம் லோகதரும சந்மார்க்கத்துக்கும், சிவதரும சந்மார்க்கத்துக்கும் வேற்றுமை தெரிந்து கொள்க

இது தெரிதற்கன்றே சந்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திரமார்க்கம் தாதமார்க்கமெனச் சங்கரனையடையும் நன்மார்கம் நான்கு என்று சிவஞானசித்தி நூலார் அருளிச்செய்ததென்க. இங்கே நான்கையும் நன்மார்க்கமென் றெடுத்துக்கொண்டு அந் நன்மார்க்கம் நான்கனுள் ஞானமென்னும் நான்காவது நன்மார்க்கத்தைச் சந்மார்க்கமெனக் கொண்டாரென்பது தாற்பரியம். ஆதலால் முன்னர்க் கூறிய வேற்றுமை சித்தம். இனித் தாதமார்க்கம் முதலிய மூன்றற்கும் பலம் சிவசாலோக்யம் சிவ சாமீப்பியம் சிவ சாரூப்பியமென மூன்றுமாம். இம்மூன்றையும் விரும்பியவர்கள் லோகதரும சந்மார்க்கத்தின் பலன்களாகிய புகழ் புண்ணியம் உலக சந்மானம் சுவர்க்காதி லோகப் பிராப்தி ஆத்மபோகம் முதலியனவெல்லாம் தமக்கு முன் அடைந்து நுகர்ந்து தள்ளுண்டபடியால் பொருளெனச் சிந்திதற்கு அநர்கங்களாக அவை அவர்களுக்கு உபேக்ஷிய்ங்களாம். அவற்றிற்கு அதீதமாவன சிவ சாலோகாதிய முதலிய மூன்றுமாம்.

இனி நான்காவதாகிய சிவதரும சந்மார்க்கத்துக்குப் பலம் சிவசாயுச்சியம். இது பிறந்திறவாப் பெருவாழ்வாய் நித்திசைய வின்ப மெனப்படும் பரமாத்ம போகம். இந்த சந்மார்க்கத்துக்கு மேல் உயர்ந்த மார்க்கமும் கிடையாது. இந்தப் பரமாத்ம போகத்துக்கு மேல் உயர்ந்த பலமுங் கிடையாது. இந்த மார்க்கந்தான ஆகமாந்தமாகிய சித்தாந்த மென்றும இந்தப பலந்தான் பரமுத்தியாகிய சிவபோகமென்றுஞ் சொல்லப்பட்டது. ஆதலால் ஈண்டுக் கூறிய சிவபோக சாதனமாகிய சித்தாந்தத்தைத் தான் பரமாசாரிய

ராகிய தட்சிணாமூர்த்தி சநகாதி முனீந்திரர்கள் நால்வருக்கும் உபதேசித்தபடி நந்திபகவானுக்கும் உபதேசித்தருளினர். அதுவே நந்திபகவானால் சனற்குமாரருக்கும் அவரால் சத்தியஞான தரிசநிகளுக்கும் அவரால் பரஞ்சோதி முனிகளுக்கும் அவரால் திருவெண்ணை நல்லூர் மெய்கண்ட சிவாசாரியர்க்கும் அவரால் அருணந்தி சிவசாரியர் முதலியோர்க்கும் அவர்களுள் அருணந்தி சிவசாரியரால் மறை ஞான சம்பந்த சிவசாரியர்க்கும் அவரால் உமாபதி சிவசாரியர்க்கும் இம்முறையே அவிச்சின்ன அநுபவ பரம்பரையாலுபதேசிக்கப் பெற்று அச்சிவதரும சந்மார்க்கமானது பூலோகத்தில் மெய்கண்ட சித்தாந்தமென வழங்கப்பெறுவதாயிற்று. தனியே சித்தாந்தமென்று வழங்கப் பெறுவதாயிதுவே. இந்தச் சித்தாந்தமாகிய சிவதருமசன்மார்க்கத்தைப் பிரதானமாகக்கொண்டு அதனைப் போதிக்க வந்தது பிரகிருதத்தில் இம்மேலைச்சிவப்பட்டி யென்னும் மங்கள நகரத்திற் கூடிய சபையாதலால் இது சந்மார்க்க சபையெனப் பேர்பெற்றது. ஆதார ஆதேய சாதிருஸ்யம் முதலிய பல நயங்களால் அதயாந்தம் இகபர யோக க்ஷேம அபிவிருத்தி சூசகமாக அமைந்த தென்பதை நோக்கி நாம் மிகுந்த சந்தோஷத்தையும் திருப்தியையும் அடைகின்றோம். ஆதார ஆதேய சாதிருஸ்ய மாவது- மேலைச்சிவப்பட்டி ஆதாரம். சந்மார்க்க சபை ஆதேயம். ஆதாரம் ஸ்தானம்; ஆதேயம் ஸ்தானி. மேலைச்சிவபபட்டி யென்பது இடுகுறியாதலோடு காரண வகையால் உந்நத ஸ்தானமாகிய சிவனுக்குரியதாகிய பட்டி யெனப் பொருள்படும். பட்டி யென்பது "பட்டி மண்டபம் ஏற்றினை" யென்று திருவாசக வருணூல் அருளிச்செய்தபடி ஆன்றோரிருக்கும் இடமென்பது பொருள். (ஹட) என்னுந் தாதுவிலிருந்து தோன்றி (ஹட்டி) (பட்டி) யென்றாய்த் தமிழில் தற்பவமாகிய தென்று கொள்ளற்பாலது. சந்மார்க்க சபை யென்பது உந்நதமாகிய மார்க்கத்துக்குப் போதகமாய் ஆன்றோர்களது நிலைக்களமென்றபடி. நான்காவதாகிய சந்மார்க்கத்திற்குரிய உந்நதராகிய சிவன் என்னும் மேலைச்சிவன் கோசரிக்கப்படுவர். உந்நத சிவனென்னும் மேலைச் சிவனை நான்காவதாகிய சந்மார்க்கந்தான் கோசரிக்கும். இங்கே மேலைச்சிவனென்றது தாதமார்க்கத்துக்குரிய சகளசிவன் சத்புத

திர மார்க்கத்துக்குரிய சகள நிஷ்கள சிவன் சகமார்க்கத்துக்குரிய நிஷ்கள சிவன் என்னும் மூன்றவர்க்கும் மேலாகி, நான்காவதாகிய சன்மார்க்கத்துக்குரிய அகண்ட பரிபூர்ண ஸ்வரூப சிவத்தை சன்மார்க்கமோ நான்காவதென்பது சித்தம். ஆதலால் அந்த நான்காவது மேலைச்சிவனது பட்டியாகிய மேலைச்சிவப்பட்டி யென்னும் மகைஸ்வரிய மங்கள நகரமாதாரமாக அதற்கொப்ப நான்காவதாகிய சன்மார்க்க போதக சபை யென்னும் சன்மார்க்க சபை ஆதேயமாக மேற்கிளந்த ஆதார ஆதேய சாதிருஸ்ய மென்னு மொருமைச் சம்பந்தம் பற்றிய பெருநயம் ஈண்டுளதென்பது சித்தமேயாயிற்று. சன்மார்க்க சபை யென்பது சாக பார்த்திபன் என்றாற்போலச்சமாசம் கொள்ளத்தக்கது

இனி மேலைச்சிவப்பட்டி நகரவாசிகள், இவர்களுக்கு ஒக்கல்களாய் அந்தரங்க பிரேரகர்களாகிய அடுத்த நகரவாசிகள் போஷகர்களாக இச்சன்மார்க்கசபை போஷ்யமாகப் போஷக போஷ்ய சம்பந்தம் பற்றிய பெருநயமும இங்கேகொள்ளத்தகும். இனிவரும் சப்பியர்கள அங்கங்களாகவும் சபை அங்கியாகவும் அங்காங்கிபாவசம்பந்தம்பற்றிய பெருநயமும் இங்கே கொள்ளத்தகும். இனிச் சபாநாயகர் நியாமகராகவும் சபை நியாம்யமாகவும் நியாமகநியாம்ய சம்பந்தம் பற்றிய பெருநயமும் இங்கேகொள்ளத்தகும்.

இனி மேலைச்சிவப்பட்டி நகரவாசிகள் முதலியோர உபகார்யர்களாகவும் சபை உபகாரமாகவும உபகாரோபகார்யசம்பந்தமும்பற்றிய பெருநயமும் இங்கேகொள்ளத்தகும்.

இங்ஙனம் பல பெருநயங்கள் இங்கேகொள்ளத்தக்கன. இவற்றினம் பற்றி அவற்றையும்விரித்துக்கொள்க.

இத்துணைப்பெருநயங்களமைந்தஇம்மேலைசிவப்பட்டிச்சன்மார்க்கசபை ஊழியூழி ஆசந்திரார்ககம் நீடூழிவாழ்ந்து தழைத்தோங்கும் பொருட்டும் இச்சன்மார்க்க சபைக்கு எந்தவிதத்திலும் உபகாரர்களாயிருந்து இதனையாதரித்துவரும் நகரவாசிகளும அவர்கள் இஷ்ட பந்துக்களும் சப்பியர்களும் சபாநாயகர்களுமாகிய சமஸ்த உத்தம ஜனங்களும் சர்வாபீஷ்ட சித்திஎய்திச் சதா இன்பத்தினமர்ந்து

நீடூழி இனிதுவாழும்பொருட்டும் வேண்டுவார் வேண்டியதை யீயு ம் பரமதயா நிதியாகிய ஸ்ரீசிவகாமியம்பா சமேத ஸ்ரீசிதம்பர சிற்ச பா நடேசப்பெருமானது குஞ்சித சரணாரவிந்தத்தையும் நமதுவை திக சைவசித்தாந்தகுலதெய்வ,குருபரம் பிர்மாவதீர்ண பரமாசார் யஸ்வாமிகள் "சன்மார்க்கமே முதலாத்தாதமார்க்கத் தளவுந் தன் மா ர்க்கமான எங்கள் சம்பந்த" னென்னும் மதுரைமாநகர் வைதிகசைவ விஜய கேசரி ஸ்ரீஞானசம்பந்தவள்ளலாரது உபய சரணாரவிந்தங்களி லும் ஆராவன்போடு மனமொழி மெய்களாற் பணிந்து பிரார்த்திக் கின்றோம்.

| | |
|---|---|
| விரோதிகிருதிஞு சித்திரைமீ" மி-உ ஸ்ரீஞானசம்பந்தஸ்வாமி மடாலயம் திருநெல்வேலி | இங்ஙனம் அம்பலவாண நாவலன். |

# *பொறுமை.

மலர்தலையுலகத்து மனிதரானெய்தற்பாலனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் அடைவதற்குப் பொறுமையை யுடையனாதல் இன்றியமையாத தாம். அதாவது காரணம்பற்றியாதல் அறியாமையானாதல் ஒரு வன் தனக்குத் தீங்குசெய்கவழி தானும் அதனை அவனிடத்துச் செய்யாதிருத்தலாம். அதுபற்றியே தெய்வப்புலமைத் திருவள் ளுவ நாயனாரும் "அகழ்வாரைத்தாங்குநிலம்போலத்தம்மை யிகழ வார்ப்பொறுத்தறலை" என்றார். இதன்பொருள்: தன்னை யிகழ்வா ரை வீழாமற்றாங்கு நிலம்போலத் தம்மை யவமதிப்பாரைப் பொ றுத்தல் தலையாய வறமாம். "வீழாமற்றாங்கு நிலம்போல என்ற உவமையான் இகழ்வானைற்றலினும் பன்மடங்கு பேராற்றல் உடை யவனாயினும் அவ்விகழ்வானிடத்து சினமுறாமைவேண்டுமென்பது பெறப்பட்டது" என்று கூறவே தனக்கு ஓர் தீங்குஞ் செய்யாத

* இது மேலைச்சிவப்பட்டிச் சன்மார்க்கசபை இரண்டாம் ஆண்டு நிறை வேற்றக் கொண்டாட்டப்பெருஞ் சபையில் உபந்யசித்தது.

பிறர் ஆக்கத்தைக்கண்டு தான் பொறாமைப்படாதிருத்தல் அவசிய மென்பது சொல்லாமலே வெள்ளிடைமலைபோல அறியப்படும். ஏனெனில் "ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு" என்றார் ஔவை மூதாட்டியார். இதன்பொருள்: பொறாமையான சொற்களை ஒருவன் சொல்லுதல் அவனுடைய செல்வத்திற்குக் கேட்டைத் தருவதாகும், என, வாக்கின் றொழில்கூறவே மனம் காயம் இவைகளின் றொழிலாகிய நினைத்தல் செய்தல்களும் கூடாதென்பது" "ஒருமொழியொழிதன்னினங்கொளற்குரித்தே" என்ற சூத்திரப் படி பெறப்படும்

இதனாலன்றோ திருதராட்டிரன் மனைவியாகிய காந்தாரி, தன் கொழுந்தனாகிய பாண்டுவின் மனைவி குந்தி தருமனைப் பெற்றாளென்று கேள்வியுற்றுத் தன் கணவனுக்குப் பின்பிறந்தோன் மனைவி புத்திரப்பேறடைந்தனளே தான் முன்பிறந்தோன் மனைவியும் பட்டத்தரசியுமாயிருந்தும் உலகாளுவதற்கு ஒரு புத்திரன் பிறக்கவில்லையேயென்ற பொறாமையால் தன் கருப்பத்தைப் பின்வருந் தீங்கை நினையாது கெடுத்துக்கொண்டாள்.

"விளையாட்டு வினையாய்முடியும்" என்பதுபோலத் துரியோதனாதியர்கள் பாண்டவர்களிடத்திலுள்ள வில்வித்தை முதலிய சாமர்த்தியத்திற் பொறாமைப்பட்டதோடு தருமபுத்திரர்செய்த ராஜசூய யாகத்தைக்கண்டு பொறாமைப்பட்டு பாண்டவரை அஸ்தினாபுரத்திற்கு வரவழைத்து தந்திரமாகச் சூதாடி அவர்கள் நாடு நகரங்களைத் தன்வசமாக்கிக் காட்டுக்கனுப்பியதோடு அருச்சுனன் தவஞ்செய்கிறானென்று கேள்வியுற்று அதை அழிப்பதற்காக மூகாசுரனை அனுப்பினான். அவனழிந்ததன்றித் தன்னெண்ணமும் நிறைவேறவில்லை. அதன்றித் தன் வாழ்வைக்கண்டு பாண்டவர்கள் பொறாமையால் அழிவார்களென்று சகுனி கன்னன் சயத்திரதன் முதலானவர்களோடு காட்டிற் சென்று சித்திரசேனனென்னுங் கந்தருவனால் அவமதிப்படைந்தார்கள். இவ்விதமாக எத்தனையோ காரியங்களிற் பொறாமைப்பட்டு அவமதிப்படைந்தான். எல்லாச் செல்வமும் இன்பமுமிருந்தும் அவை பொறாமையாலன்றோ பயன்படாவாயின. அதன்றித் தனக்குங் கேடு நேர்ந்தது.

"ஈவது விலக்கேல்" என்பது பொறாமையின்மையை அடைய வேண்டுமென்பதை யுணர்த்தும். ஏனெனில் ஒருவன் மற்றொருவனுக்கு ஒரு பொருளை ஒரு வாழ்வைக் கொடுப்பதைக்கண்ட மற்றொருவர் பொறாமைப்படுவரேல் அத்தன்மையோர்தஞ் சுற்றத்தார் உடுக்கவும் உண்ணவும் வழியற்றுக் கெடுகின்றார்களென்றால் அவர் கேடு சொல்லாமலே பெறப்படும். இதுபற்றியே கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉமின்றிக் கெடும், என்றார் திருவள்ளுவனார். அன்றியும் "அழுக்காறெனவொருபாவி திருச்செற்றுத் தீயுழியுய்த்துவிடும்" என்றார். ஆகையால் இம்மையிற் பொருளை யிழப்பித்து மறுமையில் தீவழி காட்டுமியல்புடைத்தாதலின் அப்பொறாமையை நீக்குவது அத்தியாவசியம் என்பது யாவருங் கொள்ளத்தகுந்தது. பொறுமையை உடையவர்கள் "பொறுத்தார் பூமியாள்வார் என்றபடி இம்மையிற் பெருஞ் செல்வத்தையும் அப்பொருள்வாயிலாக, நடுவண தெய்த விருதலையு மெய்துமென்றபடி அறத்தையும் இன்பத்தையும் பெறுதலொருதலை "பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழ் என்றதனால் உலகமுள்ளளவும் புகழையும் "பெற்றுவைதவன்றன்னை நன்றுவாழ்த்தினனெனவுந் தீய செய்தவன்றன்னை நன்று செய்தவனெனவுங் கொள்வோன் கைதவமகன்ற முத்திகண்டவன்" என்று ஆன்றோர் கூறியபடி வீட்டின்பத்தையும் அடைவார்கள். ஆகையால் பொறுமையை யாவரும் இன்றியமையாததாகக் கொள்ளவேண்டும்.

தெ. அரு. சித. இராமநாதச் செட்டியார்,
கண்டனூர்.

உ

திருச்சிற்றம்பலம்

## மேலைச்சிவப்பட்டிச் சன்மார்க்க சபை

# வாழ்த்துப் பாக்கள்.

இச்சபையின் இரண்டாம் ஆண்டு நிறைவேற்றக் கொண்டாட்டப் பெருஞ்சபைக்கு வரமுடியாத பண்டிதர் பலர் கடிதங்களும் தந்திகளுமனுப்பியிருந்தவர்களில் கோயமுத்தூர் ஸ்ரீமாந் ஆனரபில் சம்பந்தமுதலியாரவர்கள், திருநெல்வேலி கவர்ன்மெண்டு வக்கீல ஸ்ரீமத். சுந்தரசாஸ்திரிகள், முதலியதககார்களின் அன்புமிகப்பாராட்டற்பாலதே.

நாகை நீலலோசனி யதிபரும் செந்தமிழ்க் கவிபாடுந்திறமையிற்சிறந்தாரும் ஆகிய ஸ்ரீமத் ஜி. சதாசிவம்பிள்ளையவர்கள் தந்திமூலம் இருகவிகளும, லிகிதமூலம ஒருகவியும் அனுப்பியிருக்கார்கள். அக கவிகள் மிகவும் இனிமை பயந்துநிற்றலின் அறிஞர் மகிழுமாறு அடியில் தருகிறேன்.

### தந்திக்கவிகள்

சன்மார்க்க சபைதனிலே தமிழ்மார்க்கப் புலவீர்நீர் தயவாய்
வந்து, நன்மார்க்கப் பிரசங்க நயமாகக மாப்பொழிந்த நதத்தினாலே
புன்மார்க்கம் போயொளிந்து புனிதமார்க் கம்நிறைந்த புதுமை
தன்னைக், கன்மார்கக நெஞ்சமுமிளன களமார்க்க மறியாதேன் கழற
லென்னே. (1)

சன்மார்க்க சபைவாழ்க சபைததலைமை பூண்டிருந்து தருமஞ்
சொன்ன, நன்மார்க்கச் சிவஞான யோகியென்னு நாவலரோ, னயந்து
வாழ்க, புன்மார்க்கம் போயகலப் புனிதமாக கம்புகன்ற புலவர்
வாழ்க, சொன்மார்க்கங் கேட்டிருநத துணைவரெலா நீடூழி சுகித்து
வாழ்க. (2)

### லிகிதக்கவி

அக்காளிற் பழநியப்ப னருட்கூடற சபையமர்ந்தே யாய்ந்தாற்
போல, இக்காளி லிம்மேலைச் சிவபுரியா மெழினகரி லேற்றமிக்க,
நன்னாளிற் சன்மார்க்க சபையமைத்துத் தமிழாயு நலத்தைக கொண்
டான், தென்னனும பழனியப்பச் சீமான்றன் செழுஞ்சீர்த்தி சிறந்து
வாழி. (3)

# திருவெம்பாவை யாராய்ச்சி.

[முன் கடு-ம் பக்கத்தொடர்ச்சி.]

### மு. இராகவையங்கார் எழுதியது.

இனித் திருவெம்பாவைப் பாசுரங்களை நோக்குவோம். அதன் பாசுர மொவ்வொன்றும் "எம்பாவாய்" என்றே முடிந்து நிற்ற லோடு, "போற்றினா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்" என மார்கழி நோன்பைப்பற்றிக் கூறியும அம்மாதத்தே பெண்கள் ஒருவரை யொருவர் துயிலெழுப்பி நீராடி—கண்ணபிரானைக் கணவனாக அடைய ஆய்ச்சியர் பிரார்த்தித்ததுபோல—சிவபிரானைத் தம் நாயகனாகவடையப் பிரார்த்திப்பதை உணர்த்தியும் செல்வதாம். அன்றியும், திருப்பாவையில் ஆண்டாள்,

"ஆழிமழைக் கண்ணா ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுட் புக்கு முகந்துகொ டார்த்தேறி
ஊழி முதல்வ னுருவம்போன் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில
ஆழிபோன் மின்னி வலம்புரிபோ னின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ வுலகினிற் பெயதிடாய் நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

என்றநாடுசெழித்தற்கு மழைபெய்யவருணனைவேண்டியதுபோல,

"முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய மழையேலோ ரெம்பாவாய.

என்று வாதவூரடிகளும் மழைக்கடவுளை வேண்டினர். இவற்றால், திருவெம்பாவையும் திருப்பாவையும் வேறுவேறு தெய்வச் சார்புடையவாயினும், ஒரே பொருட்குறிப்புடையனவென்பது வெளிப்படும். ஆனால், வாதவூரடிகளது திருவெம்பாவை காத்யாயனீ

தேவி விரதம்பற்றி யெழுந்தது என்பதற்குப் பிரமாண மூண்டோ என்னுங் கேள்வி இங்கே உதிக்கக்கூடியது. அதனைச் சிறிது ஆராய்வோம். திருவாசகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும், அதனதன் விஷயம் புலப்படுமாறு, தலைக்குறிப்பு இடப்பட்டிருப்பது பலருமறிவர். இக்குறிப்புகள், அவற்றின் நடையாலும் கேள்வியினாலும் பழமையானவை என்றே தெரியவருகிறது. அம்முறையே திருவெம்பாவைக்குச் "சத்தியைவியந்தது" என்ற விஷயக்குறிப்பு அமைந்துள்ளது. இத்தலைக் குறிப்பையும், பாகவதத்துக் கண்டவாறு, மார்கழி நீராட்டநோன்பில் காத்யாயனீதேவி வணங்கப்படும் புராதன வழக்கையும், அந்நோன்பு விஷயமே வைஷ்ணவர் வழங்கும் திருப்பாவைக்கு மூலமாதலையும் சேர்த்து நாம் ஆராயுமிடத்து,—திருவாதவூரடிகளது திருவெம்பாவை, காத்யாயனி அல்லது பராசக்தியின்சம்பந்தம்பற்றி எழுந்ததாகவேதெளியப்படுகின்றது. ஆனால், இதற்கு வேறுபொருள் இப்போது கூறப்படுகிறது அஃதாவது,—"சத்தியை வியந்தது" என்பதற்கு,—மனோன்மணிமுதல் வாமையீறான நவசக்திகளும் ஒருவரையொருவர் பிரேரிக்க, அதனால் பிரபஞ்ச சிருஷ்டி நிகழுங்காலம் மார்கழிமாதமென்றும், அக்காலத்து நிகழும் அச் சக்திகளின் பிரேரகங்களையே வாதவூரடிகள் திருவெம்பாவையில் தமிழுணர்த்துவதாக அருளினரென்றும் சிலரால் கருத்துக்கூறப்படுவதேயாம். ஆயின், இக்கருத்துரை, திருவெம்பாவை வரலாற்றைக் குறிப்பிக்கும் திருவாதவூரர் புராணத்திலும் வேறு பழைய நூல்களிலேனும் கூறப்பட்டிருப்பதாகத் தெரிந்திலது. அன்றியும் இக்கருத்துரையில், சில சந்தேகங்களும் உண்டாகக்கூடியன நவசக்திகளும் திருவெம்பாவையில் வியந்து கூறப்பட்டன வென்பதே நோக்கமாயின், அதன் தலைக்குறிப்பு, "சக்திகளை வியந்தது" என்று முன்னோர்களால் அமைந்திருத்தலே முறையாம். இன்னும், சிருஷ்டி நிகழுமபடி நவசக்திகள் பிரேரிக்கும் விஷயம் யாதாயொன்றினும குறிக்கப்படாது, சிவபிரானை நாயகனாக அடையவேண்டிப் பெண்கள் பிரார்த்திக்கும் கூற்றாக அவை பெரும்பாலும் அமைந்திருத்தலும்; "முன்னிக்கடலை" என்ற பாட்டில் "இன்னருளே யென்னப்பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்" என்று மழை பெய்யவும், பிறவாறாய் வேண்டப்படுதலும் எதுபற்றி என்ற சந்

கையும் நிகழ்கின்றது. திருவெம்பாவை ௨௰-பாசுரங்களில் ௩-பாசுரங்கட்கு மட்டும் நவசக்திகளின் பிரேரணையை விஷயமாகக் கூறி, ஏனைப் பதினொரு பாடல்கட்கு அவதாரிகை கூறவியலாமற் செல்வதும், அதற்கு மற்றோர் ஆக்ஷேபமாம். ஒருகால், திருவெம்பாவைக்குக் கூறிய இந் நவசக்திக் கருத்து, திருக்கோவையாருண்மை முதலிய பொருள்போல, திருவெம்பாவையின் ஸ்வாபதேசப் (உள்ளுறை) பொருளாகச் சிலர் கூறியிருத்தல் கூடும். இப்பொருளினுண்மை எவ்வாறாயினும், திருவாதவூரர் புராணத்துக் குறித்தபடி, மார்கழிமாதத்திற் பெண்கள் நீராடி நோற்பதைக் கண்டு அவர்கள் புகன்றதாக வாதவூரடிகள் திருவெம்பாவையை அருளினரென்பதே, பாசுரங்களின் நோக்கம் என்பதிற் சிறிதும் ஐயமில்லையாம். ஆயின், அப்பெண்களால், இந்நோன்பு யாரைக்குறித்து நோற்கப்பட்டதெனின்,—"சத்தியை வியந்தது" என்று முன்னோர்களமைத்த தலைக்குறிப்போடு பொருந்தக் கூறுமிடத்து, திருவெம்பாவையானது, மேலே கூறிய பாகவத உபாக்யானத்தின்படி, காத்யாயனீ அலலது பராசத்தியைப்பற்றியதே என்று கொள்ளத்தக்கதென்க. எனவே, சத்தியை வியந்து (வணங்கிக்) கூறிய திருவெம்பாவையிற் கண்ட மார்கழி நோன்பு, காத்யாயனீ விரதம் என்பது நன்கு பெறப்பட்டது. இதற்கேறப, திருவெம்பாவையில் மழைவேண்டிக் கூறும் பாசுரமாகிய,

"முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ

மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

என்பதில், பராசத்தியையே உவமை கூறுதலும் "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன், பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய்" என அச்சத்தி புகழப்படுதலுங் கவனிக்கற்பாலன.

இனி, மார்கழிநோல்பாகிய காத்யாயனீவிரதம், பன்னூற்று ண்டுகட்கு முன்பு வழக்கு வீழ்ந்ததென்றே தோற்றுகிறது. ஏனெனில், இவ்விரத விவரம் முன்னூல்களிற் காண்டல் அரிதாயிருத்தலால் என்க. ஸ்ரீ பெரியவாச்சான பிள்ளை இந்நோன்பைப்பற்றி எழுதுமிடத்து—"இந்நோன்புக்கு மூலமென்னெனில், மீமாம்ஸையிலே ஹோளாதிகரண நியாயத்தாலே சிஷ்டாசாரஸித்தம்: "மேலையார் செய்வனகள்" என்று ஸ்ரீ ஆண்டாள்தானும் அருளிச்செய்தாள்" என்று கூறுதலால், வேதவிதிபற்றி வழங்காமற்போனதே, இந்நோன்புபற்றிய செய்திகள் வழக்கு வீழ்ந்தமைக்குக் காரணமாதல்வேண்டும். அங்ஙனம் வீழ்ந்தமையால், திருப்பாவை திருவெம்பாவைகளின் நோக்கமின்னதென்பதும் நந்நாட்டில் மறக்கப்பட்டன. பாகவதங்கூறுமாறு, மார்கழி முழுதும் அநுஷ்டித்தற்குரிய இந்நோன்பு, திருவாதிரைக்கு முன் பத்துநாள் தொடங்கிச் சைவர்களால் அநுஷ்டிக்கப்படுகிறது. ஆனால், வைஷ்ணவரால் அம்மாதமுழுதும நாளொன்றுக்கு ஒரு பாடலாக முப்பதுபாட்டும் முறையே கொண்டாடப்படுகிறது. ஆயினும், ஆண்டாளருளிய திருப்பாவை நோன்பும, திருவெம்பாவைக் கொண்டாட்டம்போல, திருவாதிரையோடு முற்றுப்பெற்றதாகவே முன்னாளில் அமைந்திருந்ததென்பது, "மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னாளால், நீராடப்போதுவீர் போதுமினோ" என்று, ஆதிரையினுஞ் சேர்ந்துவருதற்குரிய பௌர்ணமியை அந்நோன்பின்விசேடநாளாகக்கூறி, அப்பெரியாள் அருளிச்செய்தமையால் உய்த்துணரப்படும். மார்கழி மிறுதியில, ஆதிரையோடு கூடும் பௌர்ணமியையொட்டி, விருத்த கௌரீ விருதம் என ஒன்று அநுஷ்டிக்கப்படுவதாக தெரிகின்றது ஒருகால், பாகவதத்துக்கண்ட நோன்பு, இவ்விரதமாகவுங் கூடும்.

இனி, ஆண்டாளது திருப்பாவையில் இந்நோன்பு விஷயங்கள் சில குறிப்பிக்கப்பட்டுள்ளன. அவை, மேலேகூறிய பாகவத உபாக்யானத்தில, காத்யாயனீவிரத சமயத்தே கோபகன்னியர் நிகழ்த்திய செயல்களோடு பல அம்சங்களில் ஒத்துள்ளன. இப்பாவை நோன்பிற் செய்புங்கிரியைகளை ஆண்டாள்—

"வைத்து வாழ்வீர்காள் நாமுநம் பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுட்
பையத் துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாமுடியோம்
செய்யா தனசெயயோந் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையு மாந்தனையுங் கைகாட்டி
உய்யுமா றெண்ணி யுகந்தேலோ ரெம்பாவாய்.

எனவும், இந்நோன்புக்காலத்தில் வழங்குங் கருவிகளை—

"மாலே மணிவண்ணா மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலி னிலையா யருளேலோ ரெம்பாவாய்"

எனவும், நோன்பு முடிந்ததும் நடத்தப்பெறும் விருந்தை—

"கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா வுன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினா னன்றாகச்
சூடகமே வால்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போ மதன்பின்னே பாற்சோறும்
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்"

எனவும் இந்நோன்பால் விளையும் பயன், மழை பெய்து நாடு செழித்தலும், கோலமிருத்தியுமா மென்பதை:—

"ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கணம் பாவைக்குச் சாற்றிநீ ராடினாற்
தீங்கின்றி நாடெல்லாந் திங்கண்மும் மாரிபெய்
தோங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகளப்

பூங்குவளைப் போதிற் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடநிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வ நிறைந்தேலோ ரெம்பாவாய்"

எனவும் கூறுதல் கண்டுகொள்க.

இனித் தமிழ் நாட்டுப் பழைய வழக்கங்கள் பலவும் இன்றுங் காணக்கூடிய இடமாயுள்ள மலையாள நாட்டிலே நடைபெறும் மூன்று முக்கிய உற்சவங்களில் திருவாதிரைத் திருவிழா என்பதொன்று. இப்பெருவிழா, மார்கழியில் இளம் பெண்களால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று, அம்மாதத்து வருகின்ற திருவாதிரையோடு முடிவு பெறுவதாம். அங்கு நடைபெறும் இவ்விழாவின் விவரங்கள், ஸ்ரீமாந்—கோபால பணிக்கரவர்களால் ஆங்கிலத்தில் எழுதப் பெற்ற "மலையாளமும் அதில் வாழ்நரும்" (Malabar and its folk) என்ற நூலிற் கூறப்பட்டுள்ளன. திருப்பாவை திருவெம்பாவைகளின் கருத்தைத்தழுவிச் சைவ முறையாகவோ வைஷ்ணவமுறையாகவோ மலையாளத்துப் பெண்களால் இவ்வுற்சவம் நடத்தப்படுவதன்று; மற்றுத் தமிழ்நாட்டுப் புராதன வழக்கொன்றைப் பற்றியே அஃது அங்கு வழங்குவதாம். ஷை பணிக்கரவர்கள் இது விஷயமாகக் கூறிய செய்திகளைக் கீழே தருகின்றேன்.

"மலையாளத்தில் நடைபெறும் மூன்று முக்கிய உற்சவங்களிலே திருவாதிரை என்பதொன்று. அஃது, அங்கே தனுர் மாசத்தில் திருவாதிரை நாளில் முறைப்படி வரும். ஷை உத்ஸவம் பெண்களால் மட்டும் மிகுதியாகக் கொண்டாடப் படுகிறது. உத்தேசம் ஒரு நாள் தான் அது நடைபெறும். இவ்வுற்சவம் இந்துக்களுடைய புராணத்திற் சொல்லப்பட்ட காமதேவனுடைய அழிவுக்காலத்தைக் காட்டுகிறதாக ஜனங்களின் அபிப்பிராயம். * * * இந்தத் துன்பமான கதையானது நமக்குள் ஞாபகத்தில் வைக்கப்பட்டு, முக்யமாக ஸ்திரீகளால், 'வருஷத்துக்கொருமுறை விசேஷ உற்சவமாகக் கொண்டாடப் படுகிறது. விசேஷ தினத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்பாகவே இவ்வுற்சவம் தொடங்கப்பெறுகிறது. காலை நாலுமணிக்கே, பெண்களெல்லாம் படுக்கைவிட்டெழுந்து ஆசார முறைப்படி குளங்களில் ஸ்நானம் பண்ணுவார்கள். அதிலும், பாலப்பருவமுள்ள

## திருவெம்பாவை

பெண்கள் பலர், கூட்டங்கூட்டமாய்ச் சேர்ந்து நீராடுதல் மிகுதியாம். அக்காலங்களில் எல்லாரும் தண்ணீருக்குள் மூழ்கி உற்சாகமாகப் பாடுவர். ஷெ பாட்டு, யாரேனுமொரு பெண்ணால் ஸ்வரத்துக்கு அநுசரணையாக மன்மதனைக் குறித்து ஆரம்பிக்கப்படும். இந்தப் பாட்டு, பெண்கள் தங்கள் கைகளால் தண்ணீரிற் றட்டுவதனால் உண்டாகும் ஒரு விசேஷ சப்தத்தை அநுசரிக்கும். அவர்கள், இடக்கையை மூடித் தண்ணீர் மட்டத்திற்குக் கீழே ஜலத்தில் அமுக்கிக்கொண்டு வலது உள்ளங்கையைச் சாய்ப்பாக அடித்து இந்தத் தாளத்தை உண்டுபண்ணுகின்றனர். இப்படி அடிப்பதனால் தண்ணீரானது நாலு பக்கங்களினுஞ் சிதறி உரத்த சப்தத்தைச் செய்கின்றது. இப் பெண்கள் பாடுங்காலமுழுவதும் இவ்வாறு சத்தம் செய்யப்படும். இவ்வனம் தாளத்துடன் ஒரு பாட்டு முடிந்ததும் மற்றவரும் அதனைப் பின் தொடர்ந்து பாடியும், சிறிது நேரம் இளைப்பாறி மறுபடியும் அதனைத் தொடங்கியும் இவ்வாறு முறைவைத்துப் பாடிக் குதூகலிப்பது வழக்கம். இவ்விதமாக அருணோதயகாலம் வரை பெண்களெல்லாம் காலத்தைப் போக்கி உடம்பை நன்றாகத் துடைத்துக்கொண்டு, சுத்தமும் மிக்க அலங்காரமுமுள்ள ஆடைகளை உடுத்தும், கண்களுக்கு அஞ்சனந்தீட்டியும, நெற்றியில் விபூதியோ குங்குமமோ அவரவர்க்குரிய குறிகளைத் தரித்துக்கொண்டும், தாம்பூலதாரணஞ் செய்தும் விளங்குவார்கள் பிறகு, எல்லாப் பெண்களும், ஷெ உத்ஸவத்தில் முக்கியமாக நடைபெறும் ஊஞ்சலாட்டத்தைத் தொடங்குவார்கள்.

இந்த ஊஞ்சலானது, ஒரு பெரிய மூங்கிற் கழையை அடிப்பக்கத்தில் இரண்டாகப் பிளந்து, பிளந்த பக்கமொவ்வொன்றிலுந் துளையிட்டு ஒருகஜ நீளமுள்ள கழியால் இரண்டு பக்கத்தையுங் கழலாமலிறுக்கி, அந்தப் பெரிய மூங்கிற் கழையின் நுனிப்பக்கத்தை ஒரு பெரிய மரத்தின் உச்சிக் கிளையில கெட்டியாகக் கட்டித் தொங்கவிடப்பட்டது. ஊஞ்சலாடுவோர், முன் கூறிய ஒரு கஜ நீளமுள்ளதாய் இறுக்கப்பட்ட கழியில் உட்கார்ந்துகொண்டு, பிளக்கப்பட்ட அடிக் கழையின் இருபக்கங்களையும இருகைகளாலும்பிடித்துக்கொள்வர். இதனிடையிலிருந்து. வேகமாக ஊஞ்சலாடுதில், ஷெ பெண்கள் மிகுதியாகக் குதூகலமடைவர்.

இவ்வாறு, ஸ்நானஞ்செய்வதும், பாடுவதும், ஊஞ்சலாடுவதும், உற்சவக் கடைசிநாளோடு முடிவுறும். ஆனால், ஷெ கொண்டாட்டமானது, இறுதி நாளில் விசேஷமாக நடைபெறும். உற்சவமுடிவில், காலையிலே எல்லாப் பெண்களும் ஸ்நானஞ்செய்தபிறகு கொஞ்சம் வள்ளம் (கஞ்சி) குடித்துவிட்டு, பகலில் ஒரு பெரிய விருந்து நடத்துவார்கள். ஷெ விருந்தில்,

உயர்ந்த மலைப்பழங்களும் சர்க்கரைசேர்ந்த சிந்திப்பாயஸங்களும் உண்ணப்படும். அஸ்தமனம் வரையில் கொண்டாட்டமும் ஆடல் பாடல்களும் நடைபெறும். விஷு ஓணத்திருவிழாக்களில், எவ்விதம், புருஷர்கள் மாலைவேளையில் அவசியம் வந்திருக்கவேண்டுமோ அவ்விதமே, இந்தத் திருவாதிரை மகோற்சவத்தும் இருத்தல் அவசியம். அப்படிச் செய்யத்தவறிய புருஷசெயலைத் தங்கள் ஸ்திரீகளை விட்டுப்பிரிந்துபோவதற்கு அடையாளமாகக் கருதுவார்கள். மார்கழி மாதத்துப் பனியுறைப்பும், கீழ்காற்றின் குளிர் மிகுதியும், பெண்களின் மெல்லிய மேனிகட்கு மிக்க துன்பத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்தும், இந்த மஹோத்ஸவத்தே, காலையில் நீராடுவதிலும், நீராட்டத்தில் ஆடல் பாடல்கள் நிகழ்த்துவதிலும் அதிக ஆனந்தத்தை அன்னோர் அடைகின்றனர். பனியின்உறைப்பால், சரீரம் காற்றில் இலை நடுங்குவது போலப் படபடத்துக்கொண்டிருந்தும் நீராடுகின்ற இக்கொண்டாட்டம் அவர்கட்கு அதிக மனோத்ஸாகத்தை அளிக்கிறது. மலை நாட்டில் நடக்கும்இக்கொண்டாட்டத்தின்மாதிரி வேறுஎவ்விடத்தும்காண்பதரிது."

மேலே காட்டிய மலையாளத்துத் திருவாதிரைப் பெருவிழாவானது, ஆண்டாளும் வாதவூரடிகளும் அருளிய பாவைநோன்பின் செய்திகளோடு பலவிஷயங்களிலும் ஒத்துள்ளமை காணலாம். மலைநாட்டுப் பெண்கள் ஷை உற்சவத்து மார்கழி நீராடும்போது, ஜலத்தில் பெருஞ்சத்தம் கிளப்பிப் பாடிக்கொண்டு மூழ்கும் மாதிரி கைப்படியே வாதவூரடிகளும்.

"கொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி" எனவும்

"பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புன லாடேலோ ரெம்பாவாய்"

எனவும் அருளிச்செய்தல்காண்க. இவ்வுற்சவத்திறுதியில்மலைநாட்டுப் பெண்கள் ஆடையாபரணாதிகளால் தம்மை அலங்கரித்துக்கொண்டு, கூடி விருந்துண்பதும், அவ்விருந்தில், சர்க்கரை கலந்த பாயஸமுதலியன உண்பதுமாகிய வழக்கமே ஆண்டாள் காலத்தும் விளங்கிய தென்பது—திருப்பாவையில்

"கூடாரை வெல்லுஞ்சீர் கோவிந்தா வுன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போ மதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்"

எனவரும் பாசுரத்தால் தேறலாம். இவ்வாறாறுமைகள் திருவாதிரைத் திருவிழாவுக்கும் திருவெம்பாவைநோன்புக்கு முள்ளவாயினும், அத்திருவிழா, காத்யாயனீ விரதமென்று கொள்ளப்படாது மன்மதனைப்பற்றியதாக மலைநாட்டில் கருதப்படுகிறது. ஆனால், மன்மத சம்பந்தமாக அந்நாட்டார் திருவாதிரை யுற்சவத்தைக் கருதுவதற்குச் சிறிதும் நியாயமேயில்லை. ஏனெனில், காமனோன்பு பங்குனிமாதத்தே பழங்கால முதல் நடைபெறுவதேயன்றி மார்கழிக்குரியதன்றாம். ஆயினும், இவ்வாதிரைத்திருநாள், சிறு பெண்கள் கூடிநடத்தும் உத்ஸவமாதலால், இதில் மன்மத சம்பந்தம் வந்ததற்குக் காரணம், அக்காமதேவன் தங்கட்கேற்ற கணவனை யளிக்க உதவிசெய்யும்படி, காத்யாயனீதேவியை நோற்றதாயிருக்கலாம். பிற்காலத்தில், ஏனையவிடங்களிற்போல, மலையாளத்திலும், இவ்வுற்சவத்திற் காத்யாயனீ சம்பந்தம் மறக்கப்பட்டுக் கேவலம் மன்மதனைமட்டும் பற்றியதாகக் கருதப்பட்டதுபோலும். எவ்வாறாயினும், மலைநாட்டில் நடைபெறும் திருவாதிரைத் திருவிழா திருவெம்பாவையின் கருத்தைத் தழுவியதேயன்றி வேறன்று என்பதில் ஐயமில்லை.

இதுவரை கூறியவற்றால், திருவெம்பாவை நோன்பு, பழைய காலத்தில் காத்யாயனீ விரதமாகவே கருதப்பட்டு வழங்கியதென்பதும், "சத்தியை வியந்தது" என்ற திருவெம்பாவைத் தலைக்குறிப்பும் பிறவிஷயங்களும் அவ்வழக்கையே குறிப்பித்தலுங் கண்டுகொள்க.

மு. இராகவையங்கார்.

# சமாசாரக் கொத்து.

## பிழைதிருத்தம்.

இம்மாதப் பத்திரிகையில் ௩௩-முதல் ௪௰-வரையுள்ள பக்கங்களை ௩௭-முதல் ௭௦-ஆகத் திருத்திக்கொள்க.

* * * * *

மதுரை காலேஜ் பிரதம உதவி போதகாசிரியராகிய ஸ்ரீ A. ராஜாராமையர் B. A. கள்ளிக்கோட்டை ஜாமோரின் காலேஜ் பிரின்ஸிபாலாக 400 ரூ. சம்பளத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார். அக்கலாசாலைத் தலைமையை அதன் கமிட்டியார் துணிந்து, சிலமேநாவிகளின் யோசனைக்கிணங்க ஓர் தக்க சுதேச கனவானுக்கே கொடுத்ததுபற்றி மகிழ்கின்றேம். ஜூலைமீ 10-உயன்று மிஸ்டர் ராஜாராமையர் தம் புதுவேலையை ஒப்புக்கொள்வார்.

* * * * *

1903-மஞு எட்வார்ட் அரசரின் முடிசூட்டு மகோத்ஸவத்தைக் கருதி டில்லியில் தர்பார் நடத்தப்பட்ட போது லார்ட் கர்ஸன் யானைமேலேறி பவனிசென்று ராஜடாம்பீகத்தில் தமக்கிருந்த ஆசையைப் பூர்த்தி செய்துகொண்டார். இவ்வருஷக் கடைசியில் ஜார்ஜ் அரசரின் முடிசூட்டு மகோத்ஸவ சம்பந்தமாய் நடக்கும் டில்லி தர்பாரில் சக்கரவர்த்தியே நேரில் வந்திருப்பாராஞலும் சகல ராஜரீக சின்னங்களுடன் அவர் யானைமேலேறிப் பவனி வரமாட்டாராம்.

* * * * *

மதுரைக் காலேஜ்போர்ட் மெம்பர்களில்சிலர் காருடுகொத்தான், பள்ளத்தூர் முதலிய இடங்களுக்கு காலேஜ் நிதி சேகரிப்பு சம்பந்தமாய்சசென்றதில் ரூ. 8000மே கிடைத்தது என்றறிய விசனிக்கிறேம்.

* * * * *

சென்னை ராஜதானி ஏழாவது எட்வர்ட் ஞாபகச்சின்ன நிதிக்கு இதுகாறும் 2 லட்ச ரூபாய்க்கு அதிகமாகவே கிடைத்துவிட்டது. இத்தொகைகொண்டு க்ஷயரோகிகளுக்கு சென்னையில் ஓர் ஆசுபத்திரி கட்டப்படும் என்று தெரிகிறது.

* * * * *

தென் ஆபிரிக்காவில் போவர் யுத்தத்திற்குமுன் இருந்த இந்தியர் தொகை 15000. இப்பொழுது அங்கு 8000 பேர்களே இருக்கின்றனர். மீதி 7000 பேர்கள், முதலாளிகளின் தொந்திரவுக்கஞ்சி ஊரினின்றும் நீங்கியோராவர். அங்குள்ள இந்தியர்கள் இத்தொந்திரவு நீங்குமாறு பாடுபட்டு வருபவர் மிஸ்டர் காந்தி என்பார். இதுசம்பந்தமாய் இவர் மும்முறையும் இவர் புத்திரர் ஐம்முறையும் சிறைச்சாலைக்குப் போயிருக்கிறார்கள்.